DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| DVC.NO.03/2018 | | Crime No.: | Station : |
| RW : 1 | LW : | C.MP. | DVC : |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | சுரேஷ்குமார் | Caste | | |
| Father's Name | துரைசாமி | Calling | | |
| Village | வெள்ளியம்பாளையம் | Religion | | |
| Taluk | | Age | 40 | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | | 23 .06.2023. |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

1. இந்த வழக்கில் எனது மனைவியும், மகளும் மனுதாரர்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும், 1 ம் மனுதாரரும் சத்தியமங்கலம் தாலுக்காவில் தான் குடியிருந்தோம் என்றால் சரிதான். நானும் 1 ம் மனுதாரரும் சத்திமங்கலத்தில் குடியிருக்கும் போது தான் 2 மனுதாரர் பிறந்தார் என்றால் சரிதான். எனக்கும் 1 மனுதாரருக்கும் விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். விவாகரத்து வழக்கில் மனுதாரர்களுக்கு நான் எந்த வாழ்நாள் ஜீவானம்சம் கொடுக்கவில்லையென்றால் சரிதான். 1 ம் மனுதாரரின் அப்பா 2018 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். விவாகரத்து ஆன பின்பு தற்போது வரை மனுதாரர்களுக்கு எந்த ஜீவனாம்சமும் கொடுக்கவில்லையென்றால் சரிதான்.

2. விவாகரத்திற்கு பின்பு 1 ம் மனுதாரர் தற்போது வரை வேறு திருமணம் செய்துகொள்ளவில்லையென்றால் அது பற்றி எனக்கு தெரியும். என்னுடைய மகளான 2 ம் மனுதாரர் தற்போது என்ன வகுப்பு படிக்கிறார் என்றால் 6 ம் வகுப்பு.முன்பு என் மகள் நேசனல் பள்ளியில் படித்தார். தற்போது மெட்ரோ பள்ளியில் படித்து வருகிறார். தற்போது வரை என் மகளுக்கு நான் பள்ளிகூட

கட்டணம் செலுத்தியதில்லையென்றால் சரிதான். 1 ம் மனுதாரருடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் ஒரே தம்பி. நான் என் எதிருரையில் 1 ம் மனுதாரர் மாதம் ரூபாய் இரண்டு லட்சம் ஈட்டி வருகிறார் என்றும், ரூபாய் ஐம்பது லட்சத்திற்கு வீடு உள்ளது என்று சொல்லியுள்ளது தவறு என்றும் 1 ம் மனுதாரரின் தம்பியுடைய சொத்துக்களை 1 ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்வது தவறு என்றால் மேற்படி சொத்துக்கள் 1 ம் மனுதாரரின் பெற்றோர்களுக்கு சொந்தமானது. அந்த சொத்துக்கள் 1 ம் மனுதாரரின் பெற்றோர்களுக்கு பாத்தியப்ட்டது என்பதை நிரூபனம் செய்வதற்கு எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான்.

3. எனக்கும் என் குடும்பத்திற்கும் சேர்த்து 8 ஏக்கர் நிலமும், ஒரு தார்சு வீடும் உள்ளது என்றால் 7 ஏக்கர் நிலம் என் அப்பாவிற்கு உரியது. வீடும் என் அப்பாவிற்கு உரியது. என் உடன் பிறந்தவர் ஒரு சகோதரி. அவருக்கு திருமணம் ஆகி அவருடைய கணவருடன் வசிக்கிறார். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆம்னி வேன் ஓட்டுநராக உள்ளேன். மாதம் வருமானம் எனக்கு 12,000/- வரும். தோட்டத்திலிருந்து என்ன வருமானம் வரும் என்றால் என் அப்பா தான் விவசாயம் செய்து வருகிறார். தோட்டத்தில் சுமார் 100 தென்னை மரம் உள்ளது. என் அப்பாவிற்கு வயதாகிவிட்டது என்றும், அவர் விவசாயம் செய்யவில்லையென்றும், நான் தான் 7 ஏக்கர் நிலத்தையும் விவசாயம் செய்து வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் சரியல்ல.

4. குடும்ப வன்முறை சட்டத்தின் படி மனுதாரர்களுக்கு நான் மொத்தமாக ரூபாய்.30,00000/- கொடுக்க கடமைபட்டவர் என்றும் மாத ஜீவனாம்சமாக ரூபாய் 30,000/- கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் ஜீவனாம்சம் கொடுப்பதை தவிப்பதற்காக தான் பொய்யாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.